தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 மார்ச்சு 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு

*401 வினு—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்திற்குப் புதியதாக மின்இணைப்பு கோரும் விவசாயிகளை மின்சார வாரியம், நிலநீர் பொறியாளர்களிடம் சான்றிதழ் பெற்று வர கட்டாயப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் நன்மை கருதி அம்முறை ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ): தற்சமயம் அம்முறை அமுலில் இல்லை.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவரவர்களே, சாத்தனூர் பகுதியில் எப்போதும் நீர்ப் பற்றுக்குறை என்பது இல்லை. ஆகவே, அப் பகுதியிலாவது அந்த நிலத்தடிநீர் சான்றிதழ் இல்லாமல் மின்சாரம் அளிக்க அரசு ஆவன செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு மின்சாரம் தர இருக்கின்ற 35,000 பம்ப்செட்டுகளுக்கும் அத்தகைய நிலத்தடி நீர் சான்றிதழ்கள் வேண்டுமென்று வற்புறுத்தப்படமாட்டாது.

[1978 மார்ச் 6

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, 4-5 ஆண்டுகளுக்கு முன்பாகவே பம்ப் செட் வாங்கி வைத்துக் கொண்டு அதற்கான மனுவை மின்சார இலாகாவிற்குப் போட்ட பின்பும், இன்று வரையிலும் நிலத்தடி நீர் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் இல்லை என்பதால் மின்சார இணைப்புத்தர மறுக்கிறார்கள். ஆகவே, அதை நீக்குவதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சார வாரியம் ஏற்கனவே சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அவர்கள் மின்சார வாரியத்திற்கு மனு போடாமல் மோட்டாரை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு இருந்தால், அது அவர்களுடைய இஷ்டமே தவிர வேறு அல்ல.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மனுக்களைப் போட்டு இருப்பவர்களுக்குக் கூட கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மனுப்போட்டவர்களுக்காவது கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மனு போட்டவர்களுக்கு எல்லாம் தர இயலாது. சாங்ஷன் ஆகியிருப்பவர்களுக்கு மட்டும் தான் தர முடியும்.

திரு. கா. கந்தசாமி: தலைவரவர்களே, நிலத்தடி நீர் சான்றிதழ் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் வரவில்லை வரவில்லை என்று சொல்கிறார்கள். சாங்ஷன் செய்யப்பட்ட கிணறுகளுக்குக் கூட அந்த சர்டிபிகேட் கொடுத்தால் தான் அவர்கள் மின்சார சப்ளை செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இன்னும் அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் கோவை மாவட்டத்திற்குப் போய்ச்சேரவில்லையா? அரசு அதற்கான உத்தரவை மின்சார வாரியத்திற்கு அனுப்பவில்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கோவை மாவட்டமானாலும் சரி, அது வேறு எந்த மாவட்டமானாலும் சரி, சாங்ஷன் ஆகி இருக்குமானால் அப்படி சாங்ஷன் செய்யப்பட்ட பம்ப்செட்டுகளுக்கு அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் தேவை இல்லை என்று மின்சார வாரியத்திற்கு அரசு சொல்லி

யிருக்கிறது. அதற்கான உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. ஆகவே கோவை மாவட்டத்தில் அத்தகைய குறை இருக்குமானுல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அப்படி சாங்ஷன் செய்யப்பட்ட கேஸ்கள் மிக சொற்பமாக இருக்கின்றன. சாங்ஷன் ஆகாத, மனு போட்டவர்கள்—நிலவள வங்கி மூலமாக கடன் பெற்று கிணறு வெட்டி, பம்ப்செட் வாங்கி வைத்து இருப்பவர்கள் ஏராளமான பேர் இருக்கிருர்கள். அவர்கள் மின்சார இலாகா விற்கு மனுப் போட்டுவிட்டு நீண்ட நாட்களாகக் காத்துக்கொண்டு இருக்கிருர்கள். சென்ற ஆண்டு 35,000 கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது பூராவும் இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டும் அப்படி கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு எல்லா இடங்களிலும் தண்ணீர் பற்றுக்குறை இல்லாமல் இருப்பதால் அந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி விவசாயம் பாதிக்காத அளவிற்கு மின் இணைப்புகளைத் தருவதற்கு, அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் தேவை என்ற விதியைத் தளர்த்தி, விரைவாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மின்சாரம் கோரி மனுப் போட்டவர்கள் 2¼ லட்சம். ஆனுல் சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் 80,000. நாம் இந்த ஆண்டு தர இருப்பது 35,000. ஆகவே தான், சாங்ஷன் செய்யப்பட்டவர்களுக்கு முதலிலே மின் வசதி கொடுத்து விட்டு, பிறகு மற்றவை குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2¼ லட்சம் மனுக்கள் வந்து இருப்பதாகவும், அதிலே 80,000 பேருக்குத்தான் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் இந்த ஆண்டு 35,000 சாங்ஷன் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினர்கள். ஆனுல் அப்படி சாங்ஷன் செய்யப்பட்டதிலே கடந்த காலத்தில் பல தில்லுமுல்லுகள் நடந்த காரணத்தாலே அவற்றை மறுபரிசீலனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செய்து, புதிதாக தற்போது ஆய்வு செய்து, புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சாங்ஷன் செய்வதிலே தில்லுமுல்லுகள் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். தில்லுமுல்லுகள் நடந்தன என்பதற்கு எந்தவிதமான ரிகார்டும் கிடையாது.

* 402 *Q.*— Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to relax the existing procedure that power supply to new pump-sets are prohibited for wells situated within a distance of 400 feet in Dharmapuri district where adequate vround water is available ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கூட்டுறவு நிலவள வங்கி, கிராமப்புற மின் வசதிக் கழகம் ஆகியவையின் உதவியோடு மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள், இந்தக் கட்டுப்பட்டிற்கு உட்படுகின்றன. மற்ற திட்டங்களின் கீழ் இணைப்பு வழங்கு வதற்கு தற்போது இம்முறை அமுலில் இல்லை.

டாக்டர் கே. சமரசம்: தலைவர்வர்களே தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் மட்டுமல்ல; அங்கே 3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் மின் இணைப்பு கொடுப்பதில் இப்போதிருக்கின்ற விதியைத் தளர்த்தி, அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் 20,550 மனுக்கள் வந்திருக்கின்றன. அதிலே அனுமதி கொடுக்கப்பெற்றவை கிட்டத்தட்ட 3,500 தான். ஆகையால் அங்கே தேவை அதிகமாகும் அதேநேரத்தில் 'சாங்ஷன்' ஆனது 3,500 என்ற காரணத்தால் பல மனுதாரர் களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. இதற்குத் தனியாகத் திட்டம் போடுவதற்கில்லை.